# மது மற்றும் புகைத்தல் பாவனையைக் கையாளுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு – சாய்ந்தமருது பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**L.T. முகம்மட் இயாஸ்**

Department of Philosophy & Psychology, University of Peradeniya, Srilanka
iyasltm@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டது. இப்பிரதேசத்தில் அண்மைக்காலமாக மது மற்றும் புகைப் பாவனை அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இஸ்லாத்தில் முற்று முழுதாகத் தடுக்கப்பட்டுள்ள மது மற்றும் புகைத்தலானது இப்பிரதேசத்தில் அதிகரித்து காணப்படுவதற்கான காரணத்தினை கண்டறிந்து, மது மற்றும் புகைத்தலினால் ஏற்படும் விபரீதங்களை விளக்கி அதனை முற்றாக ஒழிப்பதற்கான இஸ்லாமிய உளவளத்துணையின் முக்கியத்துவத்தை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது. இதற்குத் தேவையான முதல் நிலைத் தரவுகள் மது மற்றும் புகைத்தல் பழக்கத்துக்குள்ளான 50 நபர்களை மாதிரியாகக் கொண்டு தகவல்கள் பெறப்பட்டன. இவர்களிடமிருந்து தகவல்களைப் பெற வினாக்கொத்து முறை பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகளாக கட்டுரைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் இணையத்தளமும் பயன்படுத்தப்பட்டது. இதன் கண்டுபிடிப்பாக இப்பிரதேசத்தில் ‘போதையற்ற இஸ்லாமிய இளைஞர் குழுவை உருவாக்கல்’ என்ற ஒரு குழுவை நிறுவுவதினூடாகவும், இஸ்லாமிய வழிகாட்டல்களை மார்க்க வல்லுநர்கள், முஸ்லிம் உளவளத்துணையாளர்கள் ஊடாகவும், மது மற்றும் புகைப் பாவனைக்குட்பட்டபவர்களுக்கு உளவள மற்றும் மருத்துவச் சிகிச்சை அளிப்பதினூடாகவும் இப்பழக்கத்தை முற்றுமுழுதாக ஒழிக்க முடியும் என்பதாகக் காணப்படுகிறது. இவ் இளைஞர் குழுவின் பங்காக மது மற்றும் புகை பற்றிய இஸ்லாமிக கண்ணோக்கை கற்றுக் கொள்வதும் அதனை மற்றவர்களுக்கு விளங்கப்படுத்துவதும், குழு கலந்துரையாடல்களை மேற்கொள்ளல், சமய மற்றும் ஒழுக்கம்சார் பயிற்சிகளை வழங்கல், மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வுகளை வழங்கல், செயற்பாடுகள் மூலமாக மற்றவர்களுக்கு விளங்கப்படுத்தல், விழிப்புணர்வுகளுக்குத் தேவையான உளவள ஆலோசகர்கள் மற்றும் உளநல நிபுனர்களை பெற்றுக் கொள்ளல் போன்றனவாகக் காணப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** இஸ்லாமிய உளவளத்துணை, உளநலச் சிகிச்சை, இஸ்லாமியக் கண்ணோக்கு, குழுக் கலந்துரையாடல்

## அறிமுகம்

மது மற்றும் புகையை பாவிப்பவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும், சமூகத்துக்கும் நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்திக்கும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமல்லாமல் அவை பாவிப்பவர்களை குற்றவாளிகளாகவும் மாற்றுகின்றது. இப்பழக்கத்துக்கு அடிமையானவர்களை இப்பழக்கத்திலிருந்து விடுதலை செய்வது மிகவும் கடினமான ஒரு செயலாகும்.

போதைப்பொருள் பாவனை பற்றியும் அதில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனை பற்றியும் இஸ்லாம் மிகவும் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது. இது பல்வேறு வடிவில் இடம்பெறுகிறது. அதாவது தடுத்து

நிறுத்தல், கசையடி கொடுத்தல் அல்லது எச்சரித்தல் என்ற ரீதியில் அமையப் பெற்றுள்ளது. கசையடி எனும் போது மது அருந்தியவருக்கு 40 கசையடிகள் வழங்கப்பட வேண்டும் என இஸ்லாம் குறிப்பிடுகிறது.

2017 ஆம் ஆண்டின் அபாயகர ஔடத அதிகார சபையின் புள்ளிவிபர அறிக்கைகளின்படி 2016 ஐ விட 2017 இல் போதைப் பொருள் பாவனையானது இலங்கையில் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும், வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தி வந்த 186 வெளிநாட்டுப் பிரஜைகள் கைதாகியுள்ளனர் என்றும், வளர்ந்தோரை விட இளைஞர்களிடையே போதைப் பழக்கமானது எண்ணிக்கையில் மிகவும் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும், அம்பாறை மாவட்டத்தில் போதைப் பொருட்களோடு தொடர்புடைய கைதுகளாக 1250 எனவும் அதிலும் 93மூ கைதுகள் கஞ்சாவோடு தொடர்புடைய கைதுகள் என்றும் அதிலும் 14-19 வயதுக்குட்பட்டோரே அதிகமாக கைதாகியுள்ளதாகவும், இப்பகுதியில் காணப்படும் போதைப்பொருட்களாக கஞ்சா, சாராயம், ஹெரொயின், அபின், ஓபியம், மர்ஜுவானா, ஹாசிஸ், மாவா, பீடா, சிகரட் போன்றவை கூறப்பட்டுள்ளது.

உளவளத்துணை

உளவளத்துணையானது ஒருவர் நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது, முகங்கொடுக்கும் எதிர்பாராத சம்பவங்களினால் ஏற்படுகின்ற உளரீதியான பிரச்சினைகளுக்கு உளவியல் முறைகளைப் பயன்படுத்தி, அவரிடம் கானப்படும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதன் மூலம் அவனது ஆளுமையினை விருத்தி செய்து, அவரது பிரச்சினைக்கு அவரே தீர்வு காண்பதற்கு உதவுகின்ற ஒரு பொறிமுறையாகக் காணப்படுகிறது. அனைத்துத் துறைகளிலும் உளவளத்துணை பயன்படுத்தப்படுகின்றது. இதற்காக பல்வேறு உளவளத்துணைக் கொள்கைகளும், சிகிச்சை நுட்பங்களும், திறன்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் மனிதனுடைய பிரச்சினைக்கான காரணங்களையும், அதற்கான தீர்வுகளையும், மனிதனுடன் அணுக வேண்டிய வழிமுறைகளையும் கற்றுத் தருகின்றன. இந்த நடைமுறைகள் அனைத்தும் இஸ்லாத்தினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் அறிவிக்கப்பட்டு விட்டன.

இஸ்லாமிய உளவளத்துணை

இஸ்லாமானது முஸ்லிம்களுக்கு நடத்தைச் சட்டங்களையும் மற்றும் சமூக விழுமியங்களையும் கற்றுக்கொடுக்கின்றது. இஸ்லாம் பொறுமையினையும், நெறுக்கீட்டான வாழ்க்கை நிகழ்வுகளில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கவும், அதற்குத் தேவையான நுட்பங்களை விருத்தி செய்யவும், போதைப் பொருட்கள் பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது.

இஸ்லாத்தில் ஷரீஆ என்ற 'வாழ்க்கை நெறிமுறை' காணப்படுகின்றது. இது முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய விடயங்களை வலியுறுத்துகின்றது. இது இரண்டு வகையான விடயங்களைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது மனிதன் இறைவனுக்கு செய்ய வேண்டியவை. அடுத்தது மனிதன் மனிதனுக்கு செய்ய வேண்டியவை ஆகும். இந்த ஷரிஆவின் மூலாதாரங்களாக குர்ஆனும் ஹதீஸும் விளங்குகின்றன. குர்ஆன் இறைவனை மாத்திரமே வணங்க வேண்டும் என்கிறது. ஹதீஸ் முகம்மது நபி (ஸல்) அவர்களது வழிகாட்டல்களையும், செயல்முறைகளையும் ஆலோசனைகளையும் வாழ்க்கை வழிமுறைகளையும் கொண்டதாகக் காணப்படுகிறது. இவற்றை பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும்.

உளவளச் சிகிச்சை மாதிரிகளில் இஸ்லாமிய உளவளத்துணையும் மிக முக்கிய இடத்தினை பெறுகின்றது. இஸ்லாமிய உளச்சிகிச்சை முறைகள் மேலைத்தேய உளச்சிகிச்சை முறைகளோடு பொருந்துவதாகவே காணப்படுகின்றன. இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட உளவளச்சிகிச்சை முறையில் அல்குர்ஆன், சுன்னா மற்றும் மேலைத்தேய சிகிச்சை முறைகள் என்பன பின்பற்றப்படுகின்றன.

தற்காலத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையால் முஸ்லிம்களுக்கு மத்தியில் இஸ்லாமிய உளவளத்துணையின் அவசியம் அதிகமாக உணரக்கூடியதாக உள்ளது. இன்று முஸ்லிம்கள் உளவியல் மற்றும் உளவளத்துணை கற்கைகளை அதிக ஆர்வத்துடன் கற்று வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இக்கற்கைகளை வழங்கும் நிறுவனங்களாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப்பல்கலைக்கழகம் மற்றும் தேசிய அபிவிருத்தி நிறுவனம் போன்றவற்றை இலங்கையில் குறிப்பிடலாம்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இஸ்லாத்தில் தீர்வுண்டு. போதை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் போது அத்துறைசார் இஸ்லாமிய உளச் சிகிச்சையாளர்களை இணங்கண்டு அதற்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்லாமல் மேலைத்தேய உளச்சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ளவதில் தயக்கம் காட்டக்கூடாது. இன்றைய காலங்களில் அநேகமான முஸ்லிம்கள் தங்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது உளச் சிகிச்சைகளைப் பெற தயக்கம் காட்டுகின்றனர்.

இப்பிரதேச இளைஞர்களும் வளர்ந்தோரும் போதைப்பொருட்களுக்கு அடிமையாவதற்கு காரணமாக இலகுவாக இவற்றை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவது முக்கியமானதாகும். இதன் விளைவுகள் தனிநபரில் மாத்திரமல்லாமல் குடும்பம் மற்றும் சமூகத்திலும் பல்வேறு தாக்கங்களை உண்டுபண்ணுகின்றது. இப்பிரதேசத்தில் போதைப் பொருட்களை ஒழிப்பதற்கு பல நிறுவனங்கள் முய்றிசி செய்தாலும் அங்கு மக்களின் பங்களிப்பு இன்மையால் அந்த முயற்சிகள்ளள தோல்வியில் முடிவடைந்துள்ளன.

**ஆய்வின் நோக்கங்கள்**

பிரதான நோக்கம்:

- ✓ போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை இணங்கண்டு அவர்களுக்கு இஸ்லாமிய உளவளத்துணை சிச்சையின் முக்கியத்துவத்தை வழியுறுத்தல்.

துணை நோக்கங்கள்:

- ✓ இப்பிரதேசத்தில் மது மற்றும் புகைத்தலுக்கான காரணத்தை கண்டறிதல்.
- ✓ மது மற்றும் புகைத்தலினால் ஏற்படும் விபரீதங்களை தெளிவூட்டல்
- ✓ இப்பழக்கத்திலிருந்து தடுப்பதற்கும் இப்பழகத்திலிருந்து விடுபடுவதற்கான இஸ்லாமிய வழிமுறைகளை ஆராய்தல்
- ✓ இப்பழக்கத்துக்கு அடிமையானவர்களை இப்பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகளை வழங்கல்

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டன.

இவ்வாய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத் தரவாக மாதிரி முறையைப் பயன்படுத்தியுள்ளேன். இதற்காக சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் புகை மற்றும் போதைப்பொருள்களுக்கு அடிமையாகிய 50 நபர்கள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டனர். இரண்டாம் நிலைத் தரவுகளாக இவர்களின் பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்களிடமிருந்தும் பேட்டி முறை மூலமும் இதற்கான தரவுகளையும், விபரங்களையும் பெற எத்தனித்துள்ளேன். மேலும், புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைகள், முன்மொழிவுகள், பல்வேறுப்பட்ட நூல்கள், இணையதளம் போன்றவற்றிலிருந்து தேவையான தகவல்கள் ஆய்வாளரினால் திரட்டப்பட்டது.

**தரவுகளின் பகுப்பாய்வு**

- இப்பகுதியில் காணப்படும் மது மற்றும் போதைப்பொருள்களின் தன்மைகள் இதில் ஆராயப்பட்டுள்ளன.
- ஆய்வுப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 மது மற்றும் புகைத்தலுக்கு அடிமையானவர்களும், அவர்களது பெற்றோரும் மற்றும் நண்பர்களிடமுமிருந்து இப்பழக்கத்துக்குத் தூண்டிய காரணிகள் தொடர்பான தகவல்கள் இவ்வாய்வுக்காகப் பெறப்பட்டன.
- இப்பிரதேசத்தில் மது மற்றும் புகைத்தலைத் தூண்டிய பிரதான காரணங்களாக இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு, இஸ்லாமிய விழுமியங்கள் சரியாக பின்பற்றப்படாமை, கெட்ட நண்பர்களின் சகவாசம், பொழுதுபோக்குக்காக செய்தமையும், பொருளாதாரப் பிரச்சினைகளும், இழப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

Table 1: Number of Addicted & Ages

| | **Cigarette** | **Beedi** | **Cannabis** | **Alcohol** | **Beer** | **Others** |
|---|---|---|---|---|---|---|
| **13-19** | 07 | 05 | 04 | 04 | 04 | 03 |
| **20-60** | 28 | 20 | 14 | 16 | 16 | 20 |
| **60-70** | 15 | 15 | 05 | 05 | 04 | 07 |

இவ்வாய்வில் 50 மது மற்றும் புகைத்தலுக்கு அடிமையானவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 13-19 வயதுக்குட்பட்டவர்கள் 07 பேரும், 20-60 வயதுக்குட்பட்டவர்கள் 28 பேரும், 60-70 வயதுக்குட்பட்டவர்கள் 15 பேரும் கலந்து கொண்டனர். இப்பழக்கத்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை மேலேயுள்ள அட்டவணை மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

Table 2: Jobs of Drug addicted persons

| Ages | Students | Fisherman | Business | Mason | Carpenter | Government Officers |
|---|---|---|---|---|---|---|
| **13-19** | 07 | - | - | - | - | - |
| **20-60** | 03 | 06 | 05 | 07 | 05 | 02 |
| **60-70** | - | 10 | 02 | - | - | - |

மேலுள்ள வரைபடமானது மது மற்றும் புகைத்தலுக்கு அடிமையாவர்களின் தொழில் தன்மைகளைக் காட்டுகிறது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வானது இப்பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையானது அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றமையையும் அதற்கான இஸ்லாமிய உளவளத்துணையின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

இப்பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனைக்குரிய காரணிகளாக போதைப்பொருள்களை இலகுவாக பெறும் வாய்ப்பு, வறுமை, ஆளுமையற்ற தன்மை, கெட்ட நண்பர்களின் சகவாசம், இஸ்லாமிய விழுமியங்கள் பின்பற்றப்படாமை, பெற்றோரின் கவனிப்பற்ற தன்மை, நாகரிகம், இப்பழக்கத்தை நிறுத்த முடியாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பிரதேசத்தில் காணப்படும் போதைப்பொருள்காக கஞ்சா, பீடி, சிகரட், சாராயம், பியர், புகையிலை, பாக்கு, வெற்றிலை, மாவா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்போதைப் பொருள்களை அதிகமாக இளைஞர்களும் வளர்ந்தோரும், வயோதிபர்களும் பயன்படுத்துகின்றனர். இதில் அதிகமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரும், நாளாந்தக் கூலிகளில் ஈடுபடுவோரும், மாணவர்களும் அடங்குகின்றனர்.

இப்பழக்கத்தின் காரணமாக புற்றுநோய், சுவாச நோய்கள், குடும்பத்தில் விரிசல், மகிழ்ச்சியற்ற குடும்ப வாழ்க்கை, விவாகரத்துகள், பாடசாலை இடைவிலகலர்கள், கள்ளத் தொடர்புகள், சண்டை சச்சரவுகள், தாழ்வுமனப்பாங்கு, தற்கொலை முயற்சிகள், உளநோய்கள் போன்ற பிரச்சினைகள் இப்பிரதேசத்தில் தோன்றியுள்ளன.

இப்பிரதேசத்தில் இப்பழக்கத்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் போதைப்பொருள் பற்றிய அதிக விழிப்புணர்வு செய்யப்படல் அவசியமாகும். இதனை பள்ளிவாயல்களும், உளவளத்தணையாளர்களும் முன்னின்று செய்வித்தல் வேண்டும். இதற்காக இளைஞர் குழுக்களையும் உருவாக்கி அவர்களுக்கு இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்கி இப்பணியில் ஈடுபடுவதற்காக வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

**முடிவுரை**

போதைப்பொருள்கள் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவை. தீங்கு விளைவிக்கக்கூடியவற்றை இஸ்லாம் ஹறாமாக்கியுள்ளது. போதைப்பொருள் பாவனையானது இஸ்லாத்தை விட்டும் மனிதனை தூரமாக்குகின்றது. இதனால் மனிதன் தனது மனோ இச்சைப்படி வாழ நினைக்கிறான். இதன் காரணமாக இப்பிரதேசதில் போதைப்பொருள்களை பாவிப்பவர்களும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். போதைப் பொருள்களைப் பாவிப்பதன் காரணமாக பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. அவை பாடசாலை

இடைவிலகல்களையும், பாடசாலைக்கு சமூகமளிப்பதிலும், வகுப்புக்களில் பங்குபற்றுதலிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. போதைக்கு அடிமையானவர்கள் அதிக மனவெழுச்சிசார் பிரச்சினைகளைக் கொண்டவர்களாகவும், நடத்தைப் பிறழ்வு கொண்டவர்களாகவும் மாறுகின்றனர். வீட்டு வன்முறைக் காரணிகளில் போதைப் பொருள் பாவனை முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதனை கருத்தில்கொண்டு இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட உளவளத்துணையானது இப்பிரதேசத்தில் அதிகமாக உணரப்படுகின்றது. இத்தேவையை உலமாக்களும், பள்ளிவாயலும், முஸ்லிம் உளவளத்துணையாளர்களும், உளநல மருத்துவர்களும், சமூக ஆர்வ தொண்டர்களும், இளைஞர் குழுக்களும் உணர்ந்து செயற்பட வேண்டிய தேவை காணப்டுகிறது.

**ஆலோசனைகளும் பரிந்துரைகளும்**

1. போதைப்பொருள் பாவிப்பவர்களுக்கும், விற்பவர்களுக்கும் அதன் விபரீதங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வூட்டல் வேண்டும்.
2. போதைப்பொருள் பாவிப்பவர்களை பள்ளிவாயல்கள் மூலம் தண்டித்தல் வேண்டும்.
3. இவர்களுக்கும் இவர்களின் குடும்பத்தவர்களுக்கும் சமுர்த்தி மற்றும் பொதுமக்களுக்கான அரசசார் உதவிகளை நிறுத்துதல்.
4. ஆசிரியர்கள், பாடசாலை ஆலோசகர்கள் மற்றும் பெற்றோர்கள் தங்கள் வரம்புகளை அறிந்து கொள்ள வேண்டும்.
5. போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைகளை சட்ட பூர்வமாகக் கையாளும் இடங்களுக்கு உடனே அறிவிப்பது அவசியம். அவர்கள் இதற்குத் தகுந்த தண்டனைகளை வழங்க ஆவண செய்ய வேண்டும்.
6. பள்ளிவாயல்கள், உலமாக்கள், உளவளத்துணையாளர்கள் மற்றும் உளநல மருத்துவர்கள் போதையோடு தொடர்புபட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து, அதற்கு அடிமையானவர்களை இணங்கண்டு அவர்களை தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேற வழிகாட்ட வேண்டும்.
7. போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி அதனால் பிள்ளைகளுக்கும் சமூகத்துக்கும் ஏற்படும் தாக்கங்கள் பற்றித் தெரிவிக்க வேண்டும்.
8. போதைப்பொருளின் பாதக தன்மைகள் பற்றி குடும்ப அங்கத்தவர்களுக்கு வீதி நாடகங்கள் மூலமாகவும், மற்றும் சுவரொட்டிகள் வாயிலாகவும் மக்களுக்கு தெளிவூட்ட வேண்டும்.
9. தொடர்பு சாதனங்களின் மூலம் மக்களுக்கு போதைப்பொருள் பற்றி அறிவுறுத்தல் அல்லது விளக்கல்.

***உசாத்துணைகள்***

American Psychiatric Association. (2000). Diagnostic and Statistical Manual of Mental Disordrs, 4th ed, DC: Washington.

Baler, R.D., and Volkow, N.D. (2006). Drug addiction: The neurobiology of disrupted selfcontrol. *Trends Mol Med*12(12):559–566, 2006.

Kula, R. (2009). *Masjid and solving of drug problems*. Retrieved January 20, 2013, from http://www.learners.in.th/blogs/posts/423077

Laeheem, K. (2013c). The Islamic way of youth care by Muslim leaders in the three southern-border provinces of Thailand. *Asian Social Sciences, 9*(10), 160-168.

Prendergast, M.L., Podus, D., Change, E., and Urada, D. (2002). The effectiveness of drug abuse treatment: A meta-analysis of comparison group studies. *Drug Alcohol Depend*67(1):53–72.

Prayatsap, P. (2011). *Islam and drug*. Retrieved June 24, 2012, from

http://www.islammore.com/main/content.php?page=sub&category=4&id=2963

புள்ளிவிபரக் கையடக்க நூல். (2012). தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், நிதித்திட்டமிடல் அமைச்சு, கொழும்பு.

கல்முனை பெண்கள் சிறுவர் பிரிவின் பொலிஸ் அறிக்கை - 2017

அஸ்ரப் ஞாபகார்த்த மனநலப் பிரிவின் அறிக்கை – 2014-2017

சாய்ந்தமருது பிரதேச செயலக மகளிர் சிறுவர் பிரிவின் தகவல்கள்